திருச்சியில் மறைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறனின் 21 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தில்லைநகரில் உள்ள தி.மு.க. மாவட்ட அலுவலகத்தில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே. என்.நேரு தலைமையில் தி.மு.க.வினர் முரசொலி மாறனின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்வில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி,மாநகர செயலாளரும், மேயருமான அன்பழகன், அவைத் தலைவர்கள் பேரூர் தர்மலிங்கம் மாவட்டத் துணைச் செயலாளர் விஜயா ஜெயராஜ் கருணாநிதி, டோல்கேட் சுப்பிரமணி, தொ.மு.ச. மாநில செயலாளர் குணசேகர் கோட்டத் தலைவர் துர்கா தேவி, கண்ணன் மோகன்தாஸ் ராம்குமார், ராமலிங்கம் கிராப்பட்டி செல்வம், பீ.ஆர்.பாலசுப்பிரமணியன் கலைச்செல்வி, சிங்காரம் உள்ளிட்ட பகுதி செயலாளர், மாமன்ற உறுப்பினர்கள் ஒன்றிய செயலாளர்கள் முரசொலி மாறனின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிந்து மரியாதை செலுத்தினர்.

71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் - திருப்பூரில்

919 பயனாளிகளுக்கு ரூ.13.01 கோடி மதிப்பீட்டில் நலத்திட்டங்கள்!

அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினர்!

திருப்பூர். நவ. 24-

திருப்பூர் மாவட்டம், பொங்கலூர்ஒன்றியம், அலகுமலை ஸ்ரீ வேலன் மஹாலில்16.11.2024சனிக்கிழமை அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் நடைபெற்ற 71வது அனைத்திந்திய கூட்டுறவுவாரவிழாவில்786பயனாளிகளுக்குரூ.9.66கோடி மதிப்பீட்டில் பயிர்கடனுதவிகளும், 77 பயனாளிகளுக்கு ரூ.60.63 இலட்சம் மதிப்பீட்டில் கால்நடை பராமரிப்பு கடனுதவிகளும், 28 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குரூ.2.30கோடி மதிப்பீட்டில் சுய உதவிக்குழுக்கடன்களும்,04மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.10.50 இலட்சம்மதிப்பீட்டில்மாற்றுத்திறனாளி கடனுதவிகளும், 11நபர்களுக்குரூ.3.10 இலட்சம் மதிப்பீட்டில் சிறு வணிககடன்உதவிகளும்,01 நபருக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் சரக்கீட்டுக்கடனுதவியையும், 08 நபர்களுக்கு ரூ.8.22 இலட்சம் மதிப்பீட்டில் மத்திய காலக் கடனுதவிகளும், 01 நபருக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில்வீட்டுஅடமானக்கடனுதவிகளும்,02நபர்களுக்குரூ.50,000/மதிப்பீட்டில் நாட்டுப்புற கலைஞர் கடனுதவிகளும், 01 நபருக்கு ரூ.90,000/ மதிப்பீட்டில் டாம்கோ கடனுதவிகளும் என மொத்தம் 919 நபர்களுக்கு ரூ.13.01 கோடி மதிப்பீட்டில்நலத்திட்டஉதவிகள்மற்றும்மாவட்டஅளவில்சிறந்தகூட்டுறவுசங்கங்களுக்கு கேடயங்களும் மற்றும்பல்வேறுபோட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளிக் கல்லூரி,மாணாக்கர்களுக்கு பரிசுமற்றும்பாராட்டுசான்றிதழ்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழகஉயர்நிலை செயல்திட்டக்குழுஉறுப்பினர்மு.பெ.சாமிநாதன்,மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர்.

இவ்விழாவில், கோயம்புத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கூடுதல் பதிவாளர், செயலாட்சியர் சு. இராமகிருஷ்ணன், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், ஒன்றிய கழக செயலாளர்கள் சு. சந்திரசேகர், எஸ்.பாலுச்சாமி, பல்லடம் நகர கழக செயலாளர் ந.ராஜேந்திரகுமார்,

கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர்கள் பழனிசாமி, துணைப் பதிவாளர்கள் தமிழ்ச் செல்வன், தேவி, முத்துக்குமார், ஸ்ரீதர், சரவணக்குமார், புவனேஸ்வரி, உதயகுமார் உள்பட மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழகதுணைஅமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கூட்டுறவுசங்கபிரதிநிதிகள், உள்ளாட்சிஅமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், மறைந்த ஒன்றிய முன்னாள் அமைச்சர் முரசொலிமாறன் அவர்களின் 21ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, அவரது திருவுருவப்படத்திற்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்பி., டாக்டர் இரா.மாசிலாமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன் மற்றும் கோ.கண்ணன், எஸ்.பன்னீர்செல்வம், ப்ரியா விஜயரங்கன், விஜயலட்சுமிரமேஷ், ப.கார்த்திவேல்மாறன், க.சௌந்தரராசன், மேயர் நிர்மலாவேல்மாறன், நா.பழனி, காலேஜ் ரவி, வட்டி அருணாசலம் உட்பட பலர் உள்ளனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்:

கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், நவ.24-

கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயற்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் (22.11.24) மாலை 5 மணி அளவில் கடலூர் மாநகர திமுக அலுவலகத்தில் கழகத் தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, கடலூர்கிழக்குமாவட்ட கழக செயலாளர் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாவட்ட கழகப் பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், கடலூர் மாநகர செயலாளர் கே.எஸ்.ராஜா, கடலூர்மேயர் திருமதி.சுந்தரி ராஜா, மாவட்ட துணை செயலாளர் ஆர்.சக்திவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றிய செயலாளர்கள் காட்டுமன்னார்கோயில் மேற்கு அ.முத்துசாமி, குறிஞ்சிப்பாடி தெற்கு வி.சிவகுமார், திருமுட்டம் தெற்கு தங்க.ஆனந்தன், பரங்கிப்பேட்டை வடக்கு முத்து.பெருமாள், குறிஞ்சிப்பாடி வடக்கு அ.நாராயணசாமி, கம்மாபுரம் தெற்கு கே.ஆர்.ராயர், குமராட்சி கிழக்கு த.சங்கர், குமராட்சி வடக்கு வி.கோவிந்தசாமி, பரங்கிப்பேட்டை தெற்கு ஆர்.கலையரசன், கம்மாபுரம் மத்திய பி.சுந்தரபாண்டியன், கடலூர் கிழக்கு தெ.காசிராஜன், கடலூர் வடக்கு கே.ஆர்.தனஞ்செயன், கடலூர் தெற்கு ஆர்.விஜயசுந்தரம்,

புவனகிரி கிழக்கு எம்.மனோகரன், கீரப்பாளையம் கிழக்கு வி.ஜி. சபாநாயகரம், கீரப்பாளையம் மேற்கு டி.திருமூர்த்தி, திருமுட்டம் வடக்கு எஸ்.செந்தில்குமார், காட்டுமன்னார்கோயில் கிழக்கு ஒன்றிய பொருளாளர் டி.ஜெயபாண்டியன, கடலூர்மாநகர பகுதி செயலாளர்கள் மஞ்சகுப்பம் எஸ்.பி.நடராஜன், திருப்பாப்புலியூர் எஸ். சலீம், துறைமுகம் மு.இளையராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர்கள்

வே.விக்ரமன், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பி.ஆர்.பாலமுருகன், ஜேம்ஸ் விஜயராக வன் வி.பி.பாலு, எஸ்.பி.கண்ணன், இரா.மஞ்சு, பேரூர் செயலாளர்கள் காட்டுமன்னார்கோயில் எஸ்.கணேசமூர்த்தி, வடலூர் நகர்மன்ற தலைவர் வி.சிவக்குமார், வடலூர் நகர கழக செயலாளர் தன. தமிழ்செல்வன், மண்டலக்குழு தலைவர் பிரசன்னா, திருமுட்டம் பூ.செல்வகுமார்,

அண்ணாமலைநகர் அ.பழனி, லால்பேட்டை அன்வர் சதாத்மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் இளைஞரணி ஜி.கார்த்திகே யன், மாணவரணி அமைப்பாளர் அப்பு.சந்தியநாராயணன், துணை அமைப்பாளர் கே.எஸ்.ஆர்.பாலாஜி, மகளிர் அணி அமைப்பாளார் அமுதாராணி, மகளிர் தொண்டரணி எஸ்.மனோரஞ்சிதம், பொறியாளர் அணி அப்பு.சந்திரசேகர், ஆதிதிராவிடர் நலக்குழு ஆர்.பரந்தாமன், தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர்அலி, விவசாய அணி பன்னீர்செல்வம், விவசாயத் தொழிலாளர்அணிராமசாமி, தொழிலாளனி தண்டபாணி, விளையாட்டு மேம்பா ட்டு அணி சதீஷ்குமார், அமைப்பு சாரா ஓட்டுனர் அணி தானூர் சிவக்குழுந்து ,ஓ.எல்.பெரியசாமி, அயலக அணி வாசுதேவன், லால்பேட்டை அன்வர் சதாத், மற்றும் இளைஞரணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் வி.மணிகண்டன், மற்றும் கழக முன்னோடிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்ட கூட்டத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர்உதயநிதிஸ்டாலின் அவர்கள் கடலூர் கிழக்கு மாவட்டத்திற்கு 25.11.2024 நாள் ஆய்வு கூட்டம் , மற்றும் அரசு நிகழ்ச்சிகள், நலத்திட்ட உதவிகள் மற்றும் கழக சார்பு அணி நிர்வாகிகள் கூட்ட த்திற்கு வருவதையொட்டி கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பு அளிப்பதாகும்,

27.11.2024 அன்று துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளில் கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள 395 ஊராட்சி 267 வார்டு மொத்தம்662 இடங்களில் கழக கொடியேற்றி இனிப்புகள் மற்றும் ,மரக்கன்றுகள் வழங்கியும், மாணவரணி சார்பாக தனித்திறன் பேச்சிபோட்டி, விளையாட்டு போட்டிகள், மகளிரணி சார்பாக கோலப்போட்டி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி மிக சிறப்பாக நடத்த வேண்டும் என்றும் 23.11.2024 சனிக்கிழமை, 24.11.2024 ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் நடைபெற இருக்கும் வாக்குச்சாவடி சிறப்புமுகாமில் பாகநிலை முகவர்கள் (BLA2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), கழக நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி பிரதநிதிகள் ஆகியோர் முகாமில் கலந்துக்கொண்டு புதிய வாக்காளர்களை சேர்த்தல் மற்றும் திருத்தம் பணிகளில் முழுமையாக ஈடுப்படுமாறு கேட்டு கொள்ளபட்டது.